**அசல்வழக்கு எண். OS. 411/2021- PW2 .**

**திரு. நாகராஜ் த/பெ.**

**நாள்:21.11.2023**

**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் பெங்களூரில் 15 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். எனது அப்பா பெயர் பெத்த வெங்கட்ராமையா. எனது அப்பா உடன் பிறந்தவர்கள் பெண்கள் 4 பேர், ஆண் ஒருவர். எனது சித்தப்பா சின்ன வெங்கட்ரமணப்பா. எனக்கு தமிழ் படிக்க தெரியாது. எனது அப்பா கிரயம் வாங்கிய பத்திரம் பற்றி எனக்கு தெரியும் 1977 ல் கிரயம் பெற்றுள்ளார். 1977 கிரய பத்திரத்தில் கியரம் பெற்றவரின் பெயர் ஆர்.வெங்கட்ராமையா என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. 1977 ல் சொத்தை எனது அப்பாவும் சித்தப்பாவும் சேர்ந்து கிரயம் பெற்றார்கள் என்றால் அது தவறு. 1977 ல் எனக்கு 8 வயது. எனக்கு 8 வயது என்பதால் சொத்தை எனது அப்பாவும் சித்தப்பாவும் சேர்ந்து கிரயம் பெற்றது தெரியாது என்றால் சரியல்ல. எனது அப்பா சொத்து வாங்கிய பின்பு உயில் எழுதி உள்ளார் என்றால் அவர் உயில் எதுவும் எழுத வில்லை. உயிலில் எனது அப்பா பாதி சொத்தும் எனது சித்தப்பா பாதி சொத்தும் கிரயம் வாங்கியதாக சொல்லி உள்ளார்கள் என்றால் எனது அப்பா உயில் எழுதவில்லை. எனது அப்பா உயிலில் அவர் வாங்கிய பாதி சொத்தை எனது சித்தப்பாவிற்கு விற்பனை செய்துவிட்டதாக எழுதி உள்ளார் என்றால் இல்லை. அதனால் தான் பட்டா பெறும் போது எனது சித்தப்பா பெயரையும் போட்டு எனது அப்பா குறிப்பிட்டு பட்டா வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ல் எனது அப்பா பெயரும் சித்தப்பா பெயரும் உள்ளது என்றால் அது தவறு. வருவாய் அதிகாரிகள் பட்டா வழங்குவதற்கு முன்பு உரிய முறையில் விசாரணை செய்துவிட்டு தான் உரிமையாளருக்கு பட்டா வழங்குவார்கள் என்றால் அது தவறு. வா.சா.ஆ.6 பட்டா எனது அப்பா சித்தப்பா சேர்ந்து பெற்றார்கள் என்றும் அது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதையும் எனது அப்பா எனது சித்தப்பாவிற்கு கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்றும் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த பாத்தியமும்

இல்லை என்றால் சரியல்ல. சொத்துக்களை முழுவதும் எனது அப்பா சித்தப்பாவிற்கு கொடுத்துவிட்டதால் தான் தாவா சொத்துக்களை பொறுத்து எனது அப்பா எந்த ஆவணமும் எங்கள் பெயரில் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் உயில் படி தாவா சொத்துக்கள் முழுவதுவமாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது தவறு அது போர்ஜரியான ஆவணம். முறையான ஆவணங்களின் அடிப்படையில தான் பிரதிவாதிகள் அவர்கள் பெயரில் ஆவணம் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா ஏற்கனவே உயில் எழுதி வைத்துவிட்டார் என்றும் நான் தான் தெரியாமல் என் பெயரில் பட்டா வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா எனது பெயரில் வழங்குவதற்கு முன்பே பிரதிவாதிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வட்டாட்சியர் ஏற்கனவே யார் பெயரில் பட்டா உள்ளது என்பதை கவனிக்காமல் சரியான முறையில் விசாரணை செய்யாமல் எங்கள் பெயரில் பட்டா வழங்கி உள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் எங்களது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எங்களது ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சயில்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./—எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**